# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்
# அ.வ.எண். 37/2024

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வெங்கடாசலம் | தொழில்: | விவசாயம் |
| த/பெ: | பழனிசாமி | சமயம்: | இந்து |
| முகவரி: | எலந்தகுட்டை | வயது: | 56 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

10.11.2025

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 26.05.1986 | வாதியின் தாத்தா ராமசாமி கவுண்டர் பெயரில் உள்ள தாவா சொத்தின் கிரைய ஆவணம் எண்.1296/1986 | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 03.09.1998 | வாதியின் பெயரில் உள்ள பொது பாக பாத்திய விடுதலை ஆவணம் எண்.148/1998 | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 20.04.1998 | வாதியின் தாத்தா ராமசாமி கவுண்டர் இறப்புச் சான்றிதழ் | அசல் | வா.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 12.06.1998 | வாதியின் தாத்தா ராமசாமி கவுண்டர் வாரிசுச் சான்றிதழ் | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 25.02.2024 | வாதி பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா எண்.8655 | இணையவழி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.5 |

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)